எமது நிலையத்தில் சகல விதமான
புடைவை வகைகளையும்
தைத்த ஆடைவகைகளையும்
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
என்பதை வாடிக்கையாளருக்கு
அறியத்தருகிறோம்.
லிடன்
புடைவை நிலையம்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலிவு விற்பனை
நத்தார் புதுவருட
பண்டிகை நாட்களை
முன்னிட்டு
01-12-93 — 31-12-93
வரை சகல மலிவு விலையில்
விசேட கழிவுடன்
பெற்றுக்கொள்ள
லிடன்
புடைவை நிலையம்
249, மின்சார நிலைய வீதி,
யாழ்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 09 வெள்ளிக்கிழமை 24 12 - 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 28

# தப்பியோடிய இராணுவத்தினர் எண்ணிக்கை இதுவரை 22,500!

## பொலிஸாரின் தேடுதல் தீவிரம்

கொழும்பு, டிசம்பர் 24

தமிழீழப் போராட்டம் தீவிரம் அடைந்த கடந்த பத்து வருடங்களில், மொத்தம் 22 ஆயிரத்து 547 இராணுவத்தினர் படையை விட்டுத் தப்பி ஓடிவிட்டதாக பிந்திய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே வெளிவந்த மதிப்பீடுகளின் பிரகாரம் வடக்கு - கிழக்கு யுத்தம் ஆரம்பித்த பின்னர் 366 அதிகாரிகள் உட்பட 9717 பேர் இராணுவத்தை விட்டு ஓடியதாகக் கணக்கிடப்பட்டது

ஆனால் இப்போது, பத்தாண்டு காலப் போரில் 22 ஆயிரத்து 547 பேர் தப்பி ஓடினர் என்றும் அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்றும் இராணுவ உயர் பீடம் பொலிஸாரிடம் உதவி கேட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன

இதனைத் தொடர்ந்து தப்பியோடிய இராணுவச் சிப்பாய்களைத் தேடிக் கண்டு பிடிக்க பொலிஸில் விசேட பிரிவு ஒன்று அமைக்கப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்களின் பிந்திய புள்ளி விவரத்தை "த ஐலண்ட்" பத்திரிகை நேற்று வெளியிட்டிருந்தது.

22 ஆயிரத்து 547 சிப்பாய்களுடன் 131 அதிகாரிகளும் இராணுவத்தை விட்டு தப்பி ஓடியதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களைக் கண்டுபிடிக்கப் பொலிஸாரின் உதவியை நாடியுள்ள இராணுவத்தினர், தேடுதலைத் தீவிரமாக்குமாறும், அதனை ஸ்திரமாக நடத்துமாறும் கேட்டுள்ளனர்.

இராணுவத்தை விட்டு தப்பி ஓடியவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்றும், இவர்களை உடனடியாக கண்டு பிடிக்கவேண்டும் என்றும் இராணுவம் மேலும் கோரியுள்ளது (ஒ-எ 6)

## இன்று முதல் 3 நாள் கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம் டிச 24

கிளாலி—பூநகரிப் படகுச் சேவை இன்று முதல் மூன்று தினங்கள் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

கடும் மழை காற்று காரணமாக படகுச் சேவை கடந்த ஒரு வார காலமாக நடைபெறவில்லை.

மீண்டும் இன்று ஆரம்பமாகும் படகுச் சேவை ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் தொடர்ந்து இடம்பெறும் (ஒ—3)

## பல்கலை, வெட்டுப்புள்ளி: ஜனவரி இறுதியில் தெரியும்

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் முடிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி அடுத்த மாத இறுதிப் பகுதியில் வெளியாகவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பரீட்சையில் தோற்றி பல்கலைக் கழகத்துக்கு தகுதி பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன

இந்த விண்ணப்பங்களை தற்சமயம் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு ஆராய்ந்து வருவதாகவும் —

இதற்கான வெட்டுப்புள்ளி ஜனவரி இறுதிப் பகுதியில் வெளியாகும் என்றும் – தெரிவிக்கப்பட்டது.

பெப்ரவரி மாதத்தில் புதிய மாணவருக்கான விரிவுரைகள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது (ஒ 3)

பெரும் திரளான மக்கள் முன்னிலையில்

## ஓமந்தையில் ஒருவருக்கு மரண தண்டனை!

யாழ்ப்பாணம், டிச. 24

தேசத் துரோகம் இழைத்ததன் பேரில், விடுதலைப் புலிகளால் அண்மையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒன்பது பேரில் ஒருவரான மரியதாஸ் தேவதாஸ் என்பவருக்கு ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அங்கு கூடியிருந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் முன்னிலையில் வைத்து அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது.

ஓர் உளவாளிக்குத் தண்டனை வழங்குவதன் மூலம் ஆயிரக் கணக்கான மக்களை பாதுகாத்துக் கொள்ள முடிகிறது என அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வன்னி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு மனோ தெரிவித்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட மரியதாஸ் தேவதாஸ் (வயது 43) வவுனியா பத்தினியம்மாள்குளத்தைச் சேர்ந்தவர். (ஒ-5)

## பூநகரி கல்முனைக் கடலில் குருநகர் மீனவர் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 24

பூநகரி, கல்முனைக் கடற் பிராந்தியத்தில் நேற்றுக் காலை 6 மணியளவில், படகில் ரோந்து வந்த கடற்படையினர் கண்மூடித்தனமாக பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த சுமார் 50 படகுகளை நோக்கி, படையினர் தாக்குதல் மேற்கொண்டனர். மீனவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

மீனவர்கள் படகுகளை கைவிட்டு கடலில் பாய்ந்து கரையை நோக்கி நீந்தத் தொடங்கினர். இன்னும் சிலர் படகுகளுடன் தப்பிச்செல்ல முற்பட்டனர்.

படையினரின் வேட்டுக்கள் சரமாரியாக வரவே, குருநகர் ரெக்கிளமேஷன் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த மீனவரான ஜோசப் அன்ரனி பிரான்சிஸ் (வயது 52) என்பவர் படகில் இருந்து கடலில் பாய்ந்தார்.

அப்போது அவரின் விலாப் பகுதியில் காயமேற்பட்டு சில நிமிடங்களில் மரணமானார்.

அவர் கடலில் பாயும்போது பலமான அடிபட்டு காயமேற்பட்டிருக்கலாம் அல்லது துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-15-51)

## செஞ். சர்வதேச குழுவின் புதிய பிரதிநிதி பதவியேற்பு

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியாக திரு செற்றிக் பிரலா நேற்றுப் பதவியேற்றார்.

கடந்த ஒரு வருடகாலமாக கடமையாற்றி வந்த திரு. பியட் சுவஸ்ஸரின் இடத்துக்கே இவர் நியமனம் பெற்றுள்ளார்.

திரு பிரலா கடைசியாக சோமாலியாவில் கடமையாற்றி விட்டு இங்கு வந்துள்ளார் (ஒ-3)

## திருமலை பூநகர் மக்கள் மீது படையினர் கெடுபிடி

யாழ்ப்பாணம், டிச 24

திருமலை மாவட்டம் ஈச்சிலம்பத்தைப் பகுதியில் உள்ள பூநகர் கிராமம் மீது கடந்த 21 நாட்களாக படையினர் பல தடைகளை விதித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

அங்குள்ள பூமரத்தடிச் சேனை பகுதி மக்கள் ஏனைய இடங்களுக்குச் சென்றுவர முடியாதவாறு படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் அப்பகுதி மக்கள் வேறு இடங்களில் இருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ளவர்களின் பிரதான தொழிலான விவசாயத்தை மேற்கொள்ளவும் படையினர் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலம் அப்பகுதி மக்களுக்குக் கிடைத்துவந்த மருத்துவ உதவிகளுக்கும் தற்போது படையினர் தடை விதித்துள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டது (ஒ 5)

## தென் மாகாண சபைக் கூட்டம் பதற்ற சூழ்நிலையில் ஒத்திவைப்பு

கொழும்பு, டிச 24

தென் மாகாண சபையின் வரவு செலவுத் திட்டக் கூட்டம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

நேற்று நடந்த வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது ஒழுங்கை நிலைநாட்ட முடியாதிருந்ததால் கூட்டத்தை ஒத்திப் போடுவதற்குச் சபைத் தலைவர் தீர்மானித்தார் என்று கூறப்பட்டது.

வரவு செலவுத் திட்டக் கூட்டம் நேற்று நடைபெற்ற போது, கடத்தப்பட்ட உறுப்பினர் விமல் பிரான்சிஸ்குவின் ஆசனம் மட்டுமே காலியாகவிருந்தது.

தன்னைக் காப்பாற்றுமாறு காணாமற்போன உறுப்பினர் பிரான்சிஸ்குவிடம் இருந்து தொலைபேசிச் செய்தி கிடைக்கப்பெற்றதாக முதலமைச்சர் தொடங்கொட சபையில் தெரிவித்தார். அப்போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பதற்றமும் கலக்கமும் அடைந்தனர்

மாகாண வீடமைப்பு அமைச்சர் ஜயதிஸ்ஸ அபேசிறிவர்த்தனா, சந்திரசிறி கஜதீர ஆகியோர் இக்கடத்தலின் பின்னணியில் ஐ. தே. க உயர் நிலைத் தலைவர்கள் இருப்பதாக குற்றஞ்சாட்டினர்.

இதனை ஏற்றோ, நிராகரித்தோ ஐ. தே. க உறுப்பினர்கள் ஒரு வார்த்தையும் தெரிவிக்கவில்லை

ஆட்சியில் உள்ள பொதுமக்கள் முன்னணி உறுப்பினர்கள் ஆக்ரோஷமாகப் பேசிய போது, ஐ. தே. க. உறுப்பினர்கள் மௌனமாக இருந்தனர். (அ-எ-6)

## வெள்ளத்தால் குடாநாட்டில் 57,000 குடும்பங்கள் பாதிப்பு

### விவரம் நேற்று செயலகத்தில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், டிச. 24

யாழ். மாவட்டத்தில் வெள்ளம் காரணமாக 57 ஆயிரத்து 326 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ். செயலக சமூகசேவைப் பகுதிப் பணிப்பாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் தெரிவித்தார்.

வெள்ளநிலைமை குறித்து மதிப்பீடு செய்வதற்காக நேற்று யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட உதவி அரச அதிபர்கள் தமது பிரிவில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தவர்களின் விவரங்களைச் சமர்ப்பித்தனர்.

உத்தேச மதிப்பீட்டின் பிரகாரம் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:

நல்லூர் 7,657, கோப்பாய் — 7,950, கரவெட்டி — 1,676, பருத்தித்துறை — 2,363. மருதங்கேணி — 220, சாவகச்சேரி — 13 000, சண்டிலிப்பாய் — 5,758, சங்கானை — 6,206, உடுவில் — 4.100, தெல்லிப்பழை — 932, யாழ் பாணம்— 6 158.

தீவுப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளில் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படவில்லை என்றும் —

சாவகச்சேரி பிரிவில் வசிக்கும் மக்களுடன் மேலும் கெற்பலி, தாவற்குழி முகாம்களில் வாழ்ந்த ஆயிரத்து 300 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன என்றும் — தெரிவிக்கப்பட்டது (ஒ-3)

## வீடு சேதம், பயிரழிவுக்கு நஷ்ட ஈடு வழங்க முடிவு

குடாநாட்டில் வெள்ளத்தால் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் மற்றும் பயிர் அழிவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்க, அவை குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்வதென நேற்று யாழ். செயலகத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் உதவி அரச அதிபர்களும், அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

★ இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒரு வாரத்துக்கு உலர் உணவு வழங்கல்.

★ யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட சேதங்கள், வீடுச் சேதங்கள் குறித்து கிராம சேவையாளர்கள் மூலம் பூரணமான மதிப்பீடு செய்தல். (ஒ 3)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை: விடைத்தாள் புள்ளியிடும் பணி இன்று ஆரம்பம்

கொழும்பு, டிச. 24


இம்மாதம் நடந்த ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பத்திரப் பரீட்சைக்குரிய விடைத்தாள்களுக்கு புள்ளியிடும் பணி இன்று ஆரம்பமாகிறது.

மட்டக்களப்பு, வவுனியா மற்றும் திருகோணமலை உட்பட நாட்டில் 76 நிலையங்களில் விடைத்தாள்கள் புள்ளியிடப்படுகின்றன.

இதற்காக 25 ஆயிரத்துக்கும் அதிகமான பரீட்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதியுடன் விடைத்தாள்களுக்கு புள்ளியிடும் வேலைகள் முடிவடைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார். (ஒ-எ)

## மூச்சந்தி முனி



தப்பி ஓடினவை எல்லாம் சேர்த்து, கொள்ளைப் படையை அமைச்சிருப்பினமோ... பிள்ளை.. !

## சாமிநாதன் மீண்டும் அ.தி.மு.கவில்

சென்னை, டிச 24

முன்னாள் மாநில அமைச்சர் வி.வி.சாமிநாதன் மீண்டும் நேற்று முதலமைச்சர் ஜெயலலிதா முன்னிலையில் அ.தி.மு. கவில் சேர்ந்து கொண்டார்

அ.தி.மு.கவில் இருந்து அண்மையில் விலகிய இவர், டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தலைமையிலான நல்லாட்சி இயக்கத்தில் இணைந்திருந்தார். (ஒ-எ)

## செல்லச்சாமி மீது உடன் நடவடிக்கை இல்லை

### இ.தொ.கா. வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, டிச.24

இ.தொ.காவின் பொதுச் செயலாளரான செல்லச்சாமி மீது கட்சி உடனடியாக நடவடிக்கை எதனையும் எடுக்க மாட்டாது என அதனுடன் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து தெரியவந்ததாக அறிவிக்கப்பட்டது,

மத்தியமாகாண சபையில் அங்கம் வகிக்கும் இ.தொ.கா. உறுப்பினர்கள் ஏழு பேரின் தலைமறைவு நாடகத்தை அடுத்து முதன் முறையாக இ.தொ.காவுக்குள் ஏற்பட்டுள்ள விரிசல் குறித்தும் அதற்கான காரணங்கள் பற்றியும் இ.தொ.காவின் அடுத்த சம்மேளனத்தில் ஆராயப்படக் கூடும் என்றும்.—

அச்சமயம் ஏழு உறுப்பினர்களின் தலைமறைவு நாடகத்தில் முதலாம் எதிரியாக பொதுச் செயலாளர் திரு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் இலவச சீருடை திட்டத்தை நிறுத்த முடிவு

கொழும்பு, டிச. 24

பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைகளை 1994 ஆம் ஆண்டில் வழங்குவதில்லை என்று கல்வி அமைச்சு முடிவு செய்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் மூலம் அறியவந்தது.

மாணவர்களுக்கான இலவச சீருடைகள் வழங்குவது தொடர்பாக கல்வி அமைச்சு புள்ளி விவரங்களை வழமை போல இவ்வருட ஆரம்பத்திலேயே கோரியிருந்தது.

எனினும் —

இத் திட்டத்தை நிறுத்துவதற்கு கல்வி அமைச்சும், திட்டமிடல் கொள்கை அமுலாக்கல் அமைச்சும் இணைந்து முடிவு செய்துள்ளதாகத் தெரியவந்தது.

இதேவேளை— வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் சீருடை வழங்குவது தொடர்பான புதிய திட்டம் ஒன்றைத் தயாரிப்பதில் பிரஸ்தாப அமைச்சுகள் ஈடுபட்டு

(4-ஆம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆர். நினைவாக குடாநாட்டில் இன்று அஞ்சலி

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் மக்கள் திலகம் எம் ஜி இராமச்சந்திரனின் ஆறாம் ஆண்டு நினைவு நாள் இன்றாகும்.

இதனைபொட்டி குடாநாட்டில் இன்று மலரஞ்சலி வைபவங்களும் மாலை அணிவிக்கும் நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இன்று முற்பகல் தாவடியில் உள்ள எம் ஜி. ஆர் இல்லத்திலும் மற்றும் காளியம்மன் சனசமூக நிலையம், சிவசக்தி சனசமூக நிலையத்திலும் அமரர் எம். ஜி. ஆரின் உருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செய்யப்படும்.

இன்று முற்பகல் 11 மணிக்கு குருநகரில் உள்ள அமரர் எம். ஜி. ஆரின் சிலைக்கும்—

நண்பகல் 12 மணிக்கு பாசையூரில் உள்ள அமரர் எம். ஜி. ஆரின் சிலைக்கும் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும். சிறப்புரைகளும் அங்கு இடம் பெறும்.

நினைவு நாளைபொட்டிய பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு காவடி பிள்ளையார் கோவிலடியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மறவன்புலோ, கலையா பரணன் கோட்டை வீதியில் 30 பரப்பு வளவுக்காணி விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் துண்டுகளாகவும் பெறலாம். தொடர்பு:சி. சடாட்சரம், ஐயனார் கோவிலடி, சுன்னாகம். (6753)

### தேவை

கோழிப் பண்ணைக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை. திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: தமிழகம் விற்பனை நிலையம், நெல்லியடி. (28562)

## வேலைக்குத் திரும்பினர்

கொழும்பு, டிச 24

மத்திய மாகாணத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் நேற்றுமுன்தினம் முடிவடைந்தது.

வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் நேற்று முன்தினம் வேலைக்குத் திரும்பினார்கள்.

இ.தொ.காவைச் சேர்ந்த 11 மாகாணசபை உறுப்பினர்களில் எழுவர் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து இவ்வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. (இ எ-6)

## குடமுருட்டிப்பாலம் சேதமானது

தென்மராட்சி, டிச. 24

கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் பூநகரி - கிளிநொச்சி வீதியிலுள்ள குடமுருட்டிப் பாலம் வெள்ளத்தினால் உடைந்து போய் விட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (ஒ-117)

## சமைத்த உணவு விநியோகம்

தென்மராட்சி, டிச. 24

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நாவற்குழி மகா வித்தியாலயத்திலும் கெற்பலி அரசினர் பாடசாலையிலும் தங்கியுள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக தென்மராட்சிப் பிரிவினர் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர் (ஒ-117)

## நூறு வருட மரம் வேருடன் சரிவு

சாவகச்சேரி, டிச. 24

கடந்தவாரம் பெய்த கடும் மழையினால் சாவகச்சேரியில் விறுமர் ஆலயத்தில் நின்ற சுமார் நூறு வருடம் பழைமை வாய்ந்த மருதமரம் ஒன்று வேருடன் சாய்ந்து வீழ்ந்துள்ளது. (ஒ-5)

## மரமுந்திரிகை

தாளையடி, டிச. 24

வடமராட்சி கிழக்கில் ஐம்பது ஏக்கர் நிலப்பரப்பில் மரமுந்திரிகை நடுகைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இத்திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளது. (த-144)

## இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், டிச. 24

பிற மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து பின் திரும்பிச் செல்லாத சகல ஆசிரியர்களும் எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்திற்குச் சமுகமளித்து தம்மை நேரடியாகச் சந்திக்கும்படி யாழ். கல்விப்பணிப்பாளர் (1) செல்வி தி. பெரியதம்பி கேட்டுள்ளார். (க)

## ஊர்வலம்

யாழ்ப்பாணம், டிச. 24

சிமெந்துக் கூட்டுத்தொழிலாளர்கள் தமக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டதைக் கண்டித்து தென்மராட்சியில் நேற்று முன்தினம் ஊர்வலம் ஒன்றை நடத்தி சாவகச்சேரி பிரதேச செயலரிடம் மகஜர் கையளித்தனர்.

மானிப்பாய் பகுதி கட்டடத் தொழிலாளர்களும் மானிப்பாயில் ஊர்வலம் நடத்தி மகஜர் ஒன்றை சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் கையளித்தனர் (இ- 3- 90)


★ நத்தார் வாழ்த்து மடல்கள்
★ நத்தார் கேக் சாமான்கள்
★ நத்தார் சோடனைப் பொருள்கள்
★ நத்தார் மரங்கள், பூக்கள்
★ நத்தார் பாலன் பிறப்பு செட்
★ விளையாட்டுச் சாமான்கள்
★ எவர்சில்வர் சாமான்கள்
★ குளிர் பானம் தயாரிக்கும் சாமான்கள்
★ பான்சி, பிறசென்டேசன்
★ ஸ்போட்ஸ் சாமான்கள்

இன்னும் பல ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

ராஜூ ஸ்ரோர்ஸ்
"ராஜூ பில்டிங்"

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி 6818)



அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

மக்கள் வங்கி
எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர்
போட்டிப்பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள்

2 ஆவது பிரிவு
ஆரம்பம்: 26 12-1993
மு. ப. 9 மணி.

பாடநெறி:
பொதுவிவேகம், மொழித்திறன்

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை

★ சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
★ இலவச பாடக்குறிப்புகள்
★ 10 வகுப்புகள் - கட்டணம் ரூ 250 00

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்) (சி-6822)



விக்னா கல்வி நிறுவனம்
52 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

93 பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு
A/L மீட்டல் DAY CLASSES
பிரிவு II 8.00 – 2.00 ஆரம்பமாகிவிட்டன
(8.00 TO 2.00)

பொருளியல் — திரு கலாகரன்
கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன்
வர்த்தகம் — திரு. வரதன்
அளவையியல் — திரு. A. பிரபாகரன்
மற்றும் சகல பாடங்களும்

✻ வாரத்தில் 4 நாட்களும் நடத்தப்படும். (சி/6748)


## 45ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



தாயின் மடியில்: 01 – 01 1976

தாயக மண்ணில்: 11 – 11 1993

கடற்புலி
2ஆம் லெப். விவேகன்
(பாலசுப்பிரமணியம் பாலசொரூபன்)

புதிய வரலாறு படைக்கவென பூநகரிச் சமரில் சாவியமான எமது செல்வன் 2ஆம் லெப் விவேகனையும் ஏனைய வீரவேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

எமது மகனின் வீரச்சாவு செய்தியை அறிந்து எமதில்லம் வந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், பலவகையிலும் உதவி புரிந்த அன்பர்களிற்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்திய யாழ். இந்துக் கல்லூரிச் சமூகத்தினருக்கும், கோப்பாய் - நாவலர் வித்தியாலயத்தினருக்கும், கோப்பாய் அம்மன் கோயிலடி சனசமூக நிலையத்தினருக்கும் மலர்மாலை சூட்டி, மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

நாளை (25-12-1993) சனிக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடை பெறும் 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும், மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட முறையில் அழைக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

தந்தை: திரு சண்முகம் பாலசுப்பிரமணியம்
தாய்: திருமதி பாக்கியம் பாலசுப்பிரமணியம்
சகோதரி: செல்வி தயாளரூபி பாலசுப்பிரமணியம்
ஆச்சி பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், சகோதர, சகோதரிமார்.

வைத்தியசாலை அருகாமை,
கோப்பாய் வடக்கு
கோப்பாய்

## நன்றி அறிவித்தல்

20 - 12 - 93 திங்கட்கிழமை பிற்பகல் மழை நேரத்தில் எனது தந்தையார் மானிப்பாய் வீதியில் வின்சர் சந்திக்கும் வைத்தீஸ்வரா சந்திக்கும் இடையில் இரத்த அழுத்தம் காரணமாக தவறிவிழுந்து தலையில் சிறு காயத்திற்கு ஆளானார். அவரை மோட்டார் சைக்கிளில் வந்த அன்பர் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை பெற வைத்து காவல்துறை பணிமனையில் ஒப்படைத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவ் அன்பரை இல. 1052, மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திக்கு அருகாமையில் உள்ள எமது இல்லத்தில் தொடர்பு கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்,

தகவல்.
மகன்.

(28567)

## கண்ணீர் அஞ்சலி

### முருகேசு ஆறுமுகம்

காரைநகர் பாலாவோடையைச் சேர்ந்த முருகேசு ஆறுமுகம் அவர்களின் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாலாவோடை இளைஞர்கள்
காரைநகர்

(28571)

## பதவி வெற்றிடம்

வெற்றிடம்:

1. கணக்காளர்
2. கணக்கு எழுதுநர்
3. எழுதுநர்
4. வெளிக்கள உத்தியோகத்தர்
5. தட்டெழுத்தாளர்

தகைமைகள்:

| | |
|---|---|
| கணக்காளர் | (முன் அனுபவம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்) |
| கணக்கு எழுதுநர் — | (க பொ. த. உயர்தரப் பரீட்சை சித்தி) |
| எழுதுநர் | (கணக்கியல், வர்த்தகம், பொருளியல்) |
| வெளிக்கள உத்தியோகத்தர் — | (புவியியல்) |
| தட்டெழுத்தாளர்- | ஆண் (க. பொ. த. சா/தரம், நிமிடம் 30 சொற்கள்) |

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது: 22 — 40

விண்ணப்ப முடிவு திகதி: 30 — 12 — 1993

அனுப்ப வேண்டிய முகவரி:

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
யாழ் மவட்டச் செயலகம், கோண்டாவில்.

குறிப்பு: சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அவ்அவ் உதவி அரசாங்க அதிபர் ரீதியாகவே நியமனங்களும் வழங்கப்படும்.

(சி-6755)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 05 — 06 — 1909

உதிர்வு: 04 - 01 - 1993

### அமரர் இளையதம்பி சின்னத்தம்பி

திதி: 24 — 12 — 1993

எங்கள் குடும்ப விளக்காக இருந்து எம்மை சீர்பெற வாழ வழியமைத்த அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

10/1 [illegible]
கண்டி வீதி,
[illegible]

(28570)

## வடமராட்சி கிழக்கில் நெற்செய்கை பாதிப்பு

தற்போதைய கடும்மழையினால் வடமராட்சி கிழக்கு பகுதியில் 235 ஏக்கர் நிலப்பரப்பில் பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பன், குடத்தனை செம்பியன்பற்று, நாகர்கோயில் ஆகிய பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதால் நெற்பயிர்கள் பெரிது பாதிக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் மேற்படி தகவலை தெரிவித்தார்.

இதேவேளை— சுழிபுரம், நவாலி, அராலி ஆகிய பகுதிகளிலும் நெற்செய்கை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. (த-17)

## தையல் போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வலிகாமம்தெற்கு டிச 24

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தில் தையல் பயிற்சி போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சையில் மனையியல் தையல், சுகாதாரம் ஆகிய வற்றுள் இரு திறமை சித்திகளும், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுட்பட ஆறுபாடங்களில் இரு தடவைக்கு மேற்படாமல் சித்தி பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் ஜனவரி ஏழாம் திகதிக்கு முன்பு பணிப்பாளர், கிராமிய அபிவிருத்தி திணைக்களம்- வடக்கு-கிழக்கு மாகாண சபை, திருமலை என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த- 152)

## மழையால் சுவர் இடிந்து தந்தையும் மகளும் மரணம்

வட்டுக்கோட்டை, டிச. 24

சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக வீட்டின் மண் சுவர் இடிந்து விழுந்து வயோதிபத் தந்தையும் திருமணமான மகளும் மரணமடைந்த சம்பவம் வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை இரவு 11 மணிக்கு நடந்த இந்த விபத்தில் மருதப்பிள்ளை கணபதிப்பிள்ளை (வயது 73), தேவராசா ராஜேஸ்வரி (வயது 47) ஆகிய இருவருமே இறந்தவர்கள் ஆவர் (க- 161)

## யாழ். இந்துக் கல்லூரி பிரதி அதிபர் கப்டன் என். சோமசுந்தரம் அவர்களின் மணி விழா

காலம்: 26 — 12 — 1993 ஞாயிற்றுக்கிழமை

இடம்: யாழ். இந்துக் கல்லூரி

நிகழ்ச்சிகள்:

| | | |
|---|---|---|
| பி. ப. 2-00 | மணி | கண்காட்சி உதைபந்தாட்டம் |
| மாலை 4-00 | மணி | விழா நாயகர் ஊர்வலமாக அழைத்து வரப்படல் |
| மாலை 5-00 | மணி | விழா ஆரம்பம் |

அனைவரும் அன்புடன் வருக!

செயலாளர்,
மணிவிழாக் குழு

யாழ். இந்துக் கல்லூரி

(சி-6824)

## யாழ்ப்பாண மரியன்னை பேராலய கிறிஸ்து பிறப்பு பெருவிழா வழிபாடுகள்

24ஆம் திகதி நள்ளிரவு 11-45 மணி
யாழ். ஆயரின் கூட்டுத்திருப்பலி
25ஆம் திகதி காலை 5-30 மணி திருப்பலி
காலை 6-30 மணி திருப்பலி
ஆயர் அவர்கள் ஒப்புக் கொடுப்பார்
காலை 7-30 மணி திருப்பலி
மாலை 5-00 மணி திருப்பலி

"ஆண்டவரில் அனைவரும் அகமகிழ்வோம் ஏனெனில் நம் மீட்பர் உலகில் பிறந்துள்ளார்; விண்ணகம் நின்று உண்மை அமைதி வந்தது – இந்நாளே"

யாழ். பேராலய பங்குத் தந்தை,
அருட் திரு அன்ரன் இராயப்பநாயகம்.

[சி-6869]

## வெற்றிடங்கள்

### கிராம அபிவிருத்தித் திணைக்களம் வடக்குக் கிழக்கு மாகாணசபை

தவி: 1. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்
2. தையற் பயிற்சி போதனாசிரியர்.

விண்ணப்ப முடிவு திகதி: 07 — 01 — 1994

மேலதிக விபரங்கள், மாதிரி விண்ணப்பப்படிவம் ஆகியவை பற்றிய விபரங்களை சகல பிரிவுச் செயலர் அலுவலகங்களிலும் (உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்) யாழ். செயலக கிராம அபிவிருத்திக் கிளையிலும் பார்வையிடலாம்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபரும்,
மாவட்ட ஆணையரும்,
யாழ். மாவட்டம்.

(சி-6759)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அசைவிக்க முடியுமா?

இன்னும் ஒரு வாரத்தில் பிறக்கும் அடுத்த ஆண்டை, 1994 ஆம் ஆண்டை சமாதான வருடமாகப் பிரகடனப் படுத்த வேண்டும்.

இவ்வாறு ஒரு யோசனையை தென்னிலங்கையைச் சேர்ந்த பிரசைகள் ஒருமைப்பாட்டு முன்னணி ஸ்ரீலங்கா அரசிடம் முன்வைத்துள்ளது.

நாட்டில் தீவிரவாதத்தை இல்லாமற் செய்வதற்கு சமாதான ஆண்டுப் பிரகடனம் மட்டுமன்றி சமாதானத்தை மனவிருப்புடன் உருவாக்கக் கூடியவர்களை, அதற்காக உழைக்க வல்லவர்களைக் கொண்ட, பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அங்கம் வகிக்கும் அமைச்சரவை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதனையும் பிரசைகள் ஒருமைப்பாட்டு முன்னணி வலியுறுத்தி உள்ளது.

தொழில் வல்லுநர்களின் சங்கங்கள், வர்த்தக மற்றும் கைத்தொழில் சங்கங்கள், அரசியல் கட்சிகள், சமய கலாசார மன்றங்கள் என்பனவற்றின் கருத்தின் பிரகாரமே, இவை முன்வைக்கப்பட்டனவாம்.

வாசிப்பதற்கும், கேட்பதற்கும் நல்ல யோசனைகளாகத்தான் தெரிகின்றன. அரச விரோதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்குவதற்கு அவர்களுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற மூன்றாவது யோசனையும் அவ்வாறே.

ஆனால் இவற்றை அரசாங்கம் ஏற்றெடுத்துப் பார்க்குமா என்பதே கேள்வி. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் அணுகுமுறைகளும் நுணுக்கமாக ஆராய்ந்தால், அதற்குத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் மட்டுமன்றி, சமாதானத்திலும் விருப்பமில்லை என்பது நன்கு புரியும். சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அது மனதாலோ செயலாலோ தனது சொந்தத்தில் முயற்சிக்கவில்லை என்பது ஒரு புறம். சமாதானத்தை உருவாக்குவதற்கு இருந்த வாய்ப்புகள் பலவற்றையும் வேண்டுமென்றே அது தட்டிக்கழித்தது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக உழைப்பதற்கு உள்நாட்டு அரசியல் மற்றும் மதத் தலைவர்கள் தயாராக இருந்தபோதிலும் அரசு அவர்களின் சேவையைப் பெறுவதில் அக்கறை செலுத்தியதில்லை. அதற்குப் பதில் உதாசீனம் செய்தது. இந்த வரிசையில் அமைச்சர் தொண்டமான், அங்கிலிக்கன் ஆயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோ ஆகியோரைக்குறிப்பிட்டுக் கூறலாம்.

சமாதானம் என்பது தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு ஒன்றிலிருந்தே பிறக்க முடியும். ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் ஒரு தீர்வு உருவாகாமல் சமாதானம் பிறப்பது என்பது நடக்கமுடியாத ஒன்று.

ஆனால் அரசாங்கமோ தமிழர் பிரச்சினைக்கு, அவர்கள் ஏற்கக்கூடிய குறைந்த பட்சத் தீர்வைத் தானும் வழங்குவதற்குத் தயாராக இல்லை. இருப்பதையும் இல்லாமற் செய்வதிலேயே அது தனது முழுப் புலனையும், சக்தியையும், வளங்களையும் செலவிடுகிறது. உதாரணத்துக்கு ஒன்று: இணைந்திருக்கும் வடக்கு - கிழக்கைப் பிரித்துவிடுவதற்கு அரசு ஒற்றைக் காலில் நிற்கிறது; படாதபாடுபடுகிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா?

எனவே சமாதான ஆண்டு, சமாதான அமைச்சரவை, சமாதான ஒப்பந்தம் என்று எதுவாக இருந்தாலும் தமிழர் பிரச்சினைக்கான நியாயமான தீர்வும் அதனுடன் சேர்ந்து முன்வைக்கப்பட வேண்டும். அதனையே முதன்மைப்படுத்தி அரசிடம் வலியுறுத்த வேண்டும்.

வெறும் வலியுறுத்தல் போதாது. அதனை செயல் வடிவமாக்க அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்; தூண்ட வேண்டும். இது விஷயத்தில் டாக்டர் நாத் அமரக்கோன் போன்றவர்களால் அரசை அசைவிக்க முடிந்தால் நல் விளைவு கிடைக்கும்.

முடியுமா? கிடைக்குமா?

# பிடெல் காஸ்ட்ரோ மகளுக்கு அமெரிக்கா அரசியல் தஞ்சம்!

வாஷிங்டன், டிச 24

கியூபாவின் ஜனாதிபதி பிடெல் காஸ்ட்ரோவின் புதல்வி ஒருவருக்கு அமெரிக்கா அரசியல் தஞ்சம் அளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது பெயர் அலினா பெர்னாண்டஸ் ரெவெல்ரா என்று அமெரிக்க அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை கியூபாவில் இருந்து ஸ்பெயினுக்குச் சென்ற அவர் அங்கிருந்து வாஷிங்டன் சென்றடைந்தார்.

நீண்ட காலமாக பிடெல் காஸ்ட்ரோவின் ஆட்சியை அவர் கடுமையாக விமர்சித்து வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-எ)

## முகாம்களில் வெள்ளம்

யாழ்ப்பாணம், டிச. 24

ஆனைக்கோட்டையில் உள்ள அனைத்து இடம் பெயர்ந்தோர் முகாம்களிலும் வெள்ளம் புகுந்து அங்கிருந்த அனைவரும் பாடசாலைகள், பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஆனைக்கோட்டை சந்தி முகாம், அதிகாரி முகாம், கலையோடை முகாம், அரசடி முகாம், நவாலி தென்னிந்தியத் திருச்சபை முகாம் ஆகியவற்றில் இருந்தவர்களே மீள இடம்பெயர்ந்து பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். (க-162)

## வட்டுக்கோட்டையில்
# கொலராவுக்கு இருவர் பலி; 19 பேர் ஆஸ்பத்திரியில்

வட்டுக்கோட்டை, டிச. 24

வட்டுக்கோட்டை மேற்கில் கொலரா நோயால் இருவர் மரணம் அடைந்துள்ளனர்; 19 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நூற்றுக்கு மேற்பட்டோருக்கு கொலரா நோய்த் தடுப்பு மருந்து கொடுக்கப் பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்ட இடைவிடா மழையும் வெள்ளப் பெருக்குமே இப் பகுதியில் பெரும் எண்ணிக்கையானோருக்கு கொலரா நோய் ஏற்படுவதற்கான காரணம் என்று சுகாதார வட்டாரங்கள் தெரிவித்தன.

வலிமேற்கு பிரதேச சபை உப அலுவலகத்தினர் பொதுச் சுகாதாரப் பகுதிப் பரிசோதகர், குடும்பநல சேவையாளர் முதலிய சுகாதார ஊழியர்களின் உதவியுடன் நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

செல்லன் அமுதலிங்கம் (வயது 26) என்பவரும் 8வயது ஆண்குழந்தை ஒன்றுமே கொலரா நோயால் இறந்தவர்கள் ஆவர். இவர்களின் பூதவுடலகள் காவல் துறையின் அனுசரணையுடன் தகனம் செய்யப்பட்டன. (க-161)

## உக்ரேன் தலைநகரில்
# கதிரியக்கப் பொருள்களை கடத்த முயன்றவர்கள் கைது!

மாஸ்கோ, டிச. 24

அறுநூறு கிராம் உயர் கதிரியக்கப் பொருள்களை கடத்த முயற்சித்த ஆறு நபர்கள் உக்ரேன் தலைநகரில் விசேட தீவிரவாத எதிர்ப்புத் தடுப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இக் கதிரியக்கப் பொருள்களை நாட்டை விட்டு கடத்திச் செல்ல முயற்சித்தபோது அந்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கருங்கடல் பகுதியில் வைத்து அந்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று உக்ரேன் வானொலி உள்துறை அமைச்சை மேற்கோள் காட்டி அறிவித்தது.

# வடமராட்சி கிழக்கில் வீதிகள் நீரில் மூழ்கின
## நாகர்கோவிலில் படகுப் பயணம்

தாளையடி, டிச. 24

வெள்ளப் பெருக்குக் காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதியில் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. அதனால் பல இடங்களில் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதி நீரில் மூழ்கியதைத் தொடர்ந்து அங்கு வெள்ளத்தில் படகுச் சேவை நடத்தப்படுகிறது நாகர்கோவில் சந்திக்குச் சமீபமாக இருந்து எழுதுமட்டுவாழ் குடியிருப்பு வரை நடைபெறும் இப்படகுச் சேவையில் ஒரு வழிக்கட்டணமாக 10 ரூபா அறவிடப்படுகிறது.

எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் சுமார் 4½ அடி உயரத்துக்கு தொண்டமனாறு கடல் நீரேரி நீர் பாய்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வெள்ளப் பெருக்கினால் வடமராட்சி கிழக்கில் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். குடிசைகள் சரிந்து வீழ்ந்ததால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்களும் இவர்களில் அடங்குவர்.

மணற்காடு தொடக்கம் உடுத்துறை வரையுள்ள கடற்கரையை அண்டிய பகுதிகளும் தொண்டமனாறு கடல் நீரேரியை அண்டிய பகுதியும் வெள்ளக்காடாகக் காட்சி தருகிறது. (அ-144)

# யுத்தத்திற்கான திட்டம் படைத்தளபதிகளிடம் இல்லை
## சிங்களப் பிரமுகர் அறிக்கை

கொழும்பு, டிச. 24

இலங்கை அரசாங்கத்திடமும், படைத்தளபதிகளிடமும் யுத்தத்தை நடத்துவது பற்றிய திட்டங்களோ அல்லது சரியான அணுகுமுறைகளோ கிடையாது.

தென்பகுதியில் பிரபல சட்டத் தரணியாக விளங்கும் காமினி ஈரியகொல்ல விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

பூநகரி கூட்டுப்படைத் தளத்தை புலிகள் கைப்பற்றியது எமக்குக் கிடைத்த இழிவான தோல்வியாகும். யாழ்தேவி நடவடிக்கை மூலம் கிளாலியைக் கைப்பற்றி விட்டோம் என்று படை அதிகாரிகள் கூறினர். ஆனால் பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதலின் போது புலிகள் கிளாலிப் பகுதியால் வந்தே தாக்குதல் நடத்தினர் என்று படையதிகாரிகள் தற்போது ஒப்புக்கொள்கின்றனர்.

இவை எவ்வாறு நடந்தன? பூநகரி தாக்குதல் பற்றி படையினருக்கு ஏன் தகவல் கிடைக்கவில்லை? கிளாலி கடலேரி மீண்டும் எவ்வாறு புலிகள் வசம் போனது?

பொது மக்களின் பணத்தில் பெரும்பகுதி புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கே செலவழிக்கப்படுகின்றது.

புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்காக சபாநாயகர் எம். எச் மொகமட் நாடகம் ஆடுகிறார். ஒரு முஸ்லிம் பின்னால் போகும் நிலையில் நாடு இல்லை.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## யுத்த வியாபாரத்துக்காக
# போரை நிறுத்த விரும்பாத படை உயர் அதிகாரிகள்
## அஸ்ஸாஜீ தேரோ பேட்டி

கொழும்பு, டிச 24

நான் யாழ்ப்பாணம் செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த போது என்னை சந்திக்க வந்த கப்டன், மேஜர், தளபதி உள்ளிட்ட தரங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் "சுவாமி யுத்தத்தை நிறுத்த முயற்சிக்காதீர்கள்" என்று என்னிடம் கேட்டுக் கொண்டனர்.

இந்த உயர் அதிகாரிகள் யுத்த வியாபாரத்தால் வசதியான வாழ்க்கையை அனுபவிக்கின்றனர் என்பது எனக்குப் பின்னர் தெரியவந்தது.

மனித உரிமைகள் பாதுகாப்புசங்க செயலாளர் மாதம்பாகம அஸ்ஸாஜீ தேரோ 'லக்திவ' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாஜீ தேரோ தலைமையிலான புத்தபிக்குகள் குழுவொன்று சில காலத்துக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்து திரும்பியது தெரிந்ததே.

தேரோ தமது பேட்டியில் மேலும் கூறியதாவது;

என்னை வந்து சந்தித்த படைபதிகாரிகளில் பலர் யாழ்ப்பாணத்துக்குக் களவாக பொருள்கள் அனுப்பிப் பிடிபட்டனர். இவர்களைப் போன்று இன்னும் பலர் இருக்கின்றார்கள்.

இவற்றை அறியாத சிங்கள இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் பலியாகிக் கொண்டிருக்கின்றனர்.

ஒற்றுமை மூலம்தான் யுத்தத்துக்குத் தீர்வு காண முடியும் வடக்கின் யுத்தத்தை ஆயுதங்களால் தவிர வேறு வழியில் தீர்க்க முடியாது என்று பிக்குமார் பலர் சொல்கிறார்கள். இவர்களுக்கு எங்கள் ஆட்சியாளர்களின் யுத்த முறைகளைப் பற்றித் தெரியாது. வரவர யுத்தம் பயங்கரமாகப் போகிறது இவ்வாறு தெரிவித்துள்ளார். (த-க-9)

# யாழ். நகரில் இந்த வருடம் 1,420 பேருக்கு மலேரியா

யாழ்ப்பாணம், டிச. 24

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் இந்த வருடம் டிசம்பர் முதலாம் திகதி வரை ஆயிரத்து 420 பேர் மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 304 பேர் மூளை மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1989 ஆம் ஆண்டு 405 பேரும், 1990 ஆம் ஆண்டு 287 பேரும், 1991 ஆம் ஆண்டு 1,183 பேரும், 1992 ஆம் ஆண்டு 3,160 பேரும் இப் பகுதியில் மலேரியாவால் பாதிக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது (க-162)

## சேதவிவரம் சேகரிப்பு

சண்டிலிப்பாய், டிச 24

கடந்த வாரம் பெய்த பெரு மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், வீடுகள் சேதமடைந்தவர்கள் பற்றிய விவரங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவை அலுவலர்கள் ஊடாக திரட்டப்பட்டு வருகின்றன.

கிராம சேவை அலுவலர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு சேத விவரங்களை பதிவு செய்து வருகின்றனர். (த-135)

## தற்காலிக வகுப்பறை

தாளையடி, டிச 24

நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் தற்காலிக வகுப்பறைகளை அமைப்பதற்கு 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம் மகா வித்தியாலயத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த இடப்பற்றாக்குறை இதனால் ஓரளவு நீங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-184)

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், டிச. 24

ஜி. சீ. ஈ. உயர்தரம் 1993 விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் பின்வரும் இடங்களில் குறித்த நாட்களில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

தூயகணிதம், பிரயோககணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்கள் யாழ். இந்துக் கல்லூரியில் இம் மாதம் 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளிலும் —

பௌதிகவியல் பாடம் வேம்படி மகளிர் கல்லூரியில் 27 ஆம், 28 ஆம் திகதிகளிலும்,

தாவரவியல், விலங்கியல் பாடங்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் விலங்கியல், தாவரவியல் துறைகளில் 30ஆம் திகதியும் நடைபெறும்

இந்த ஆண்டில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சேவைக்கால பயிற்சி வகுப்புகளுக்கான சகல கொடுப்பனவுகளும் இந்நாட்களில் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வெளிநாட்டு சேவைக்கு ஊழியர் தெரிவுமுறை மாறும்

இலங்கையில் வெளிநாட்டுச் சேவைக்கு ஊழியர்களைத் தெரிவு செய்யும் முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதன்படி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரிகளும் அதற்கான சமமான தகைமை உள்ளவர்களும் பகிரங்கப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரர்கள் 22 வயதுக்கும், 32 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்களுக்கான அதிகபட்ச வயதெல்லை 35 ஆகும்.

எழுத்து மூலப் பரீட்சை மூலமே வெளிநாட்டுச் சேவைக்கு ஊழியர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

1997 இல் இருந்து நேரடியாக வெளிநாட்டுச் சேவையில் சேருவோருக்கும் ஏற்கனவே அரச சேவையில் இருப்பவர்களுக்குமான வயதெல்லை 28ஆக மட்டுப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைகளுக்கு அமைய நடத்தப்படவிருக்கும் பரீட்சை பற்றிய விவரங்களை வெளிவிவகார அமைச்சு அடுத்த வருட முற்பகுதியில் அறிவிக்கும். (த-எ)

# தமிழர் இல்லங்களுக்கு ஒளியேற்ற வந்துள்ளது ஆக்கிவாயுப் பிறப்பாக்கி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினரால் ஆக்கி வாயுப் பிறப்பாக்கி ஒன்று வடிவமைக்கப்பட்டிருப்பதன் மூலம் தமிழீழத்தில் பெற்றோலிய எரிபொருளுக்கு ஈடாக மாற்றுச் சக்தி வளம் ஒன்றை பயன்படுத்த வழி ஏற்பட்டிருக்கிறது.

எரிபொருள் தடையைப் பயன்படுத்தி எப்போது வேண்டுமானாலும் தமிழர்கள் மீது விரும்பியபடி அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும் என்ற அரசின் திட்டத்திற்கு இந்த செய்தி பெரும் சவாலாக அமைந்துள்ளது.

தமிழீழப் பகுதிகளில் பெறப்படும் சிரட்டைக் கரியைப் பயன்படுத்தி அதனை வாயுச் சக்தியாக மாற்றும் ஆக்கி வாயுப் பிறப்பாக்கி ஒன்றை தமது நீண்ட கால — சலிப்பற்ற — முயற்சியின் பின் சக்திப் பகுதியை சார்ந்த தொழில் நுட்பக் குழுவினர் வடிவமைத்துள்ளனர்.

**அமைப்பு**

சிறிய 'பரல்' கொள்கலன் வடிவத்தையும் அதில் மூன்று பகுதிகளையும் கொண்டதாக இந்த ஆக்கி வாயுப் பிறப்பாக்கி அமைந்துள்ளது. அதன் மேற்பகுதி சிரட்டைக் கரியை சேர்க்கும் அறையாகவும், நடுப்பகுதி எரியும் அறையாகவும் மூன்றாவதான அடிப்பகுதி வாயுவைச் சேமிக்கும் அறையாகவும் உள்ளன.

பெறப்படும் சக்திக்கு ஏற்பவும், இடப்படும் சிரட்டைக் கரியின் அளவுக்கு ஏற்பவும் பிறப்பாக்கியின் வடிவம் மாற்றி அமைக்கப்படும்.

எரியும் சிரட்டைக் கரியில் இருந்து பெறப்படும் வாயுச் சக்தி எரிபொருளாக இயந்திர சாதனங்களுக்குச் செலுத்தப்படும். அவ்வளவுதான். 3.5 குதிரை சக்தி கொண்ட நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று ஒரு கிலோ சிரட்டைக் கரியின் மூலம் ஒரு மணிநேரம் சீராக இயங்குகிறது.

ஆக்கி வாயுப் பிறப்பாக்கியின் செயற்பாடு மற்றும் அதன் மூலம் இயக்கப்படும் இயந்திரங்கள் மின் சாதனங்கள் என்பவை பற்றி விளக்கம் அளிப்பதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சக்திப் பகுதியினர் அண்மையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

செய்தியாளர்களும் மற்றும் பொதுசனத் தொடர்பு சாதனங்களின் பிரதிநிதிகளும் அந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆக்கி வாயுப் பிறப்பாக்கி ஒன்றின் மூலம் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று சீராக இயங்குவதையும் —

ஜெனரேட்டர் ஒன்று இயக்கப்பட்டு அதன் மூலம் மின் உபகரணங்களான வீடியோ, ரீ வி. என்பன இயங்குவதையும் அங்கு கண்டு நாம் வியப்படைந்தோம்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆக்கிவாயுவின் செயற்பாட்டை சக்தி பகுதி அலுவலகத்துக்குச் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

கார், மோட்டார் சைக்கிள் என்பவற்றையும் ஆக்கி வாயு மூலம் இயக்க முடியும் என்றும் அதற்கு ஏற்ப [illegible] வாயு பிறப்பாக்கியின் வடிவத்தை மாற்றி அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான ஒருவர் தெரிவித்தார்.

பண்ணைமற்றும் எரிபொருள் மூலம் இயக்கப்படும் இயந்திர சாதனங்களை ஆக்கி வாயுப் பிறப்பாக்கி மூலம் இலகுவில் இயக்க முடிகிறது.

வீடு ஒன்றில் உள்ள மின் சாதனங்களை இயக்கக் கூடிய வலுவைக் கொடுக்கக் கூடிய பிறப்பாக்கி ஒன்றை அமைக்க தற்போது சுமார் 6 ஆயிரம் ரூபா செலவாகின்றது என்றும் —

நாளடைவில் உற்பத்தி அதிகரிக்கும்போது இந்தத்

**இளநேசன்**

தொகை குறையும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

**திருப்பு முனை**

சிரட்டைக்கரி, விறகுக்கரி என்பவற்றின் மூலம் எரிசக்தியைப் பெறும் கண்டுபிடிப்பானது உலகத்துக்குப் புதியது அல்ல. ஆனால் கொடிய யுத்தத்துக்கு முகம் கொடுத்துக் கொண்டு பொருளாதார ரீதியிலும் போராட வேண்டிய இன்றைய நிலையில் தமிழர்களுக்கு இது ஒரு திருப்பு முனையான கண்டு பிடிப்புத்தான்.

1860 முதல் 1878 வரையான காலப்பகுதியில் இத்தகைய ஆக்கி வாயுப் பிறப்பாக்கிகள் உலகில் அறிமுகமாகின. [illegible] காலத்தில் ஜெர்மனியர்கள் இத்தகைய பிறப்பாக்கிகள் மூலம் இயந்திர சாதனங்களை இயக்கினர். உலகில் உள்ள முன்னணி நாடுகளான யப்பான், ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா போன்ற நாடுகளில் இன்றும் இத்தகைய பிறப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது

ஸ்ரீலங்காவில் வடபகுதியிலேயே அதிகளவு மண்ணெண்ணெய் பாவனைப்படுத்தப்பட்டு வருகிறது இறக்குமதி செய்யும் எண்ணெயை எப்படியாவது இங்கு அனுப்பி வைக்க வேண்டிய அவசியம் அரசுக்கு உண்டு ஆனால் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றான எரிபொருளை பயன்படுத்தி தமிழ் மக்கள் மீது — தமிழர் பொருளாதாரத்தின் மீது — அழுத்தங்களைப் போட அரசு அடிக்கடி முயன்று வருகிறது

இந்நிலையில் தமிழீழ ஆக்கி வாயுப் பிறப்பாக்கித் திட்டம் தமிழர்களிடையே செல்வாக்குப் பெற்று வளர்ந்தால் அது— அரசுக்கு விடுக்கப்பட்ட பெரும் சவாலாக அமையும்.

ஆர்வமுள்ள பலர் இப்போதே சக்திப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு தமது வீட்டு மற்றும் விவசாய தேவைகளுக்கு பயன்படுத்த ஆக்கி வாயுப் பிறப்பாக்கிகளை அமைத்துக் கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

இந் நிலை தொடர்ந்தால் மலரும் புத்தாண்டில் தமிழீழ ஆக்கி வாயுப் பிறப்பாக்கிகள் தமிழர் இல்லங்களிலும் — தமிழீழ பொருண்மிய மேம்பாட்டிலும் ஒளியேற்றும். ★

# உயர்கல்வி மாணவருக்கு காப்புறுதித் திட்டம்

கொழும்பு, டிச 24

உயர்கல்வி பெறும் மாணவருக்காக காப்புறுதித் திட்டம் ஒன்றை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வகுத்துள்ளது.

விரிவான நன்மைகளும் குறைந்த நன்மைகளும் கொண்ட இந்த காப்புறுதித் திட்டம் 1-1-1994இல் இருந்து நடைமுறைக்குவரும்.

பல்கலைக்கழகங்கள், இணைக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகியவற்றைச் சேர்ந்த 60 ஆயிரம் மாணவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

புதிய திட்டம் இரண்டு பிரிவுகளாகச் செயற்படுத்தப்படும்

முதலாவது பிரிவில் வருடாந்த காப்புறுதிக் கட்டணம் 60 ரூபாவாகும். இரண்டாவது பிரிவில் வருடாந்தக் காப்புறுதிக் கட்டணம் 120 ரூபாவாகும்.

மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ் இழப்பீடாக 5 லட்சம் ரூபாவரை பெற்றுக் கொள்ளலாம்.

காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்துகொள்ளக் கூடியவர்களுக்கான வயதெல்லை 18—40 ஆகும்.

திட்டத்தில் முதலாவது பிரிவில் சேர்ந்த ஒருவர் சுகவீனமுற்று 6 மாத காலத்துக்கு கல்வியைத் தொடர முடியாது இருந்தால் அவருக்கு நாளொன்றுக்கு 50ரூபா உதவிப் பணம் கொடுக்கப்படும். இரண்டாவது பிரிவில் சேர்ந்தவருக்கு இதற்காக நாளொன்றுக்கு 120 ரூபா கொடுக்கப்படும் (த-எ)

## பனம் விதை நடுகை

யாழ்ப்பாணம், டிச 24

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பனை நடுகைத் திட்டத்தின் கீழ் கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 2,000 பனை விதைகளை நாட்டியுள்ளது.

கோப்பாய், கைதடி வீதி ஓரங்களிலும், இப்பகுதியில் உள்ள அணைக்கட்டுகளிலும் இவ்விதைகள் நாட்டப்பட்டன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமாட்சியம்பாள் இந்து பரிபாலன சபை
நீர்வேலி

## சமயபாடப் பரீட்சை டிசம்பர் 1993

மேற்படி பரீட்சை 26 — 12 — 1993 ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் நடைபெறும்.

இது சம்பந்தமான சுட்டெண், பரீட்சை நிலையம் ஆகிய விவரங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தி. வேல்நம்பி
பரீட்சைக் குழு
தலைவர்.

த. விக்கினேஸ்வரன்
பரீட்சைக் குழு
செயலாளர்.

(6754)



## நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு
## காமதேனுவின் நல்வாழ்த்துக்கள்

விருந்துபசாரத்திற்கும், சிற்றுண்டிகள் தயாரிப்பதற்கும் தேவையான

1. இறைச்சிக் கோழிகள்
2. முட்டைகள் (கோழி, தாரா)

போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

## காமதேனு விவசாய கால்நடைப்பண்ணை

வெள்ளை வீதி,
சுன்னாகம்.

(சி/6757)


## வண்ணை வைத்தீஸ்வரர் கோயிலில்
# திருவாசகப் பெருவிழா நாளை ஆரம்பமாகிறது

வண்ணை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் கோயிலில் திருவாசகப் பெருவிழா நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள அந்தப் பெருவிழாவின் முதல் நாளான நாளைய நிகழ்ச்சிகளுக்கு யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமை வகிப்பார்.

மாலை 5 30 மணிக்கு மங்கள இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். இரவு 7 மணிக்கு மங்கள விளக்கேற்றலும், தொடர்ந்து யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களின் திருவாசகம் ஓதும் நிகழ்ச்சியும் இடம் பெறும்.

இரவு 7 45 மணிக்கு ''ஒரு வாசகம்'' என்னும் தலைப்பில் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ ஜெயராஜ் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (ஒ.க. 5)

## விளையாட்டு

மருதனார்மடம் கல்விக் கோட்ட பாடசாலைகளின் 19 வயது பிரிவு அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி இறுதியாட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை எதிர்த்து உரும்பராய் இந்துக் கல்லூரி அணி மோதும்

## இன்று

சங்கானை கல்விக் கோட்டத்திலுள்ள சகல பாடசாலை அதிபர்களுக்குமான கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டு இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

★ ★ ★

சுண்டுக்குளி பரி.யோவான் ஆலய வருடாந்த கரோல் கீத ஆராதனை இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும்.

## கப்பல் பயணிகள் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், டிச. 24

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கிக் கொண்டிருக்கும் 'மாஹோ' கப்பலில் பயணம் செய்வதற்காக செயலகத்தில் பெயர் பதிவு செய்தவர்கள் இன்று காலை யாழ். செயலகத்தில் சமூகமளிக்குமாறு யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் கேட்டுள்ளார்.

தற்சமயம் கடல் கொந்தளிப்பாக உள்ளதால், வயது முதிர்ந்தவர்கள் கப்பலில் பிரயாணம் செய்வது கஷ்டமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது அதனால் பயணிகள் பற்றிய விவரங்களை அறியவே இவர்கள் இன்று அழைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-3

## சொர்க்கவாசல் தரிசனம் இன்று

யாழ்ப்பாணம். டிச. 24

இன்று மார்கழி மாதத்து வைகுண்ட ஏகாதசி தினமாகும் விஷ்ணு ஆலயங்களில் இன்று சொர்க்கவாசல் தரிசனம் சிறப்பு நிகழ்வாக இடம்பெறும்

வண்ணை வெங்கடேசப் பெருமான் ஆலயம், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம், அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம் உட்பட பல ஆலயங்களில் இன்று ஏகாதசி விழா நடைபெறும் பாணன்குளம் நாச்சியார்மன் ஆலயத்தில் அமைந்துள்ள குருவாயூரப்பன் சந்நிதானத்திலும் இன்று சொர்க்கவாசல் தரிசனம் இடம் பெறும்.

(அ-30-51)

## வெளிச்சம் இன்று வருகின்றது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' மார்கழி மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே பிரபாகரனின் ''உறுதி பூண்ட மக்கள் விடுதலையை வென்றெடுப்பார்கள்'' என்ற கட்டுரையும், வரலாற்றுத்துறை விரிவுரையாளர் திரு ப. புஷ்பரட்ணம் எழுதிய ''போராட்டக் களத்தில் பூநகரி - ஒரு வரலாற்றுப் பார்வை'' என்ற கட்டுரையும், ''நினைவழியா நாட்கள்'' கவிதை நூலுக்கான பேராசிரியர் அ. சண்முகதாஸின் மதிப்பீட்டுரையும், சேயோனின் ''பூநகரியில் கிடைத்த தடயங்கள்'' கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

வழமைபோல் கவிதை, சிறுகதைகளும் இவ்விதழில் பிரசுரமாகியுள்ளன (ஒ)

## தென்மாகாண ஆளுநராக ஜயரத்ன நியமனம்

கொழும்பு, டிச 21

தென்மாகாணத்தின் புதிய ஆளுநராக டாக்டர் எஸ். எம். ஜயரத்ன, ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை ஆளுநராக இருந்த அல்ஹாஜ் பாக்கீர்மாக்கார் கடந்த செவ்வாய் திடீரென தமது பதவியை ராஜினாமாச் செய்ததை அடுத்தே புதிய ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஆளுநரான டாக்டர் ஜயரத்ன நேற்று முன்தினம் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஆளுநர் ஜயரத்ன மேல் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் ஆவார். (ஓ-க)

வனம் வானுயர
வளம் தானுயரும்


## முக்கிய அறிவித்தல்

25 - 12 - 93 சனிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 19 - 01 - 94 புதன்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்.

968, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.



## A/L 93 இல் பரீட்சைக்கு
## தோற்றிய மாணவர்களுக்கான துரிதமீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம் :- 26-12-1993 ஞாயிறு

சனி ஞாயிறு வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| PHY. | 11-00 | — திரு. கணேசன் |
| BOT. | 12-30 | — திரு. குணசீலன் |
| ZOO. | 2-00 | — திரு தம்பிராஜா |
| PHY. | 3-30 | — திரு சோதிலிங்கம் |
| CHE. | 4 30 | — திரு. மணியம் |
| PURE/APP | 12 30 | — திரு வெக்டர் |

செவ்வாய் வியாழன் மாலைநேர வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| BOT | 3-00 | — திரு குணசீலன் |
| PHY. | 5 00 | — திரு கணேசன் |

## NEW SCIENCE ACADEMY

310, Clock tower Road. JAFFNA.

(சி/6760)





புரட்சித் தலைவர்
## அமரர் டாக்டர் எம். ஜி. ஆரின்
# ஆறாவது நினைவாண்டு விழா

காலம் :- 26 - 12 - 1993 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி
இடம் :- தாவடிப் பிள்ளையார் கோவில் திறந்தவெளியரங்கு

தலைவர் :- திரு. பொன். மதிமுகராஜா (அனைத்துலக எம் ஜி ஆர். பேரவை)

ஆசியுரை : 1) சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
2) நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

மங்கள விளக்கேற்றல் : உயர்திரு. சி வி. கே சிவஞானம் (யாழ். மாநகர சபை, முன்னாள் ஆணையாளர்)

பிரதம அழைப்பாளர் :- உயர்திரு கா மாணிக்கவாசகர் (யாழ். அரச அதிபர்)

### நிகழ்ச்சி நிரல்

1) தமிழ்த்தாய் வாழ்த்து
2) தமிழ்மரபிசை:- எம். ரி. பாலகிருஷ்ணன் (கோண்டாவில்)
3) நினைவுப் பேருரை:-
கலாநிதி அ. சண்முகதாஸ் (யாழ் பல்கலைக்கழகம்)
கலாநிதி க. குணராஜா (செங்கை ஆழியான்)
தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னணித் தலைவர்கள்
4) எம் ஜி. ஆர். விருது வழங்கல்
(ஈழத்தில் தலைசிறந்த ஆறு கலைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது)
5) கவியரங்கு
தலைமை:- கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை 'எம் ஜி. ஆர். ஒரு கலங்கரைவிளக்கம்"
6) பட்டி மன்றம்
எம் ஜி. ஆரின் நிலைத்த புகழிற்கு பெரிதும் காரணமாக அமைந்தது
சினிமாவே! அரசியலே! கொடையே!

பங்குபற்றுவோர்

| | | | |
|---|---|---|---|
| இ. ஜெயராஜ் | (கம்பன் கழகம்) | பொன். கணேசமூர்த்தி | (வங்கி) |
| சி. வேலாயுதம் | (கல்விப் பணிப்பாளர்) | சுந்தரம் டிவகலாலா | (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்) |
| அ. குமாரவேல் | (பொருளியல், ஆசிரியர்) | கா. குழந்தைவேலு | (தமிழ் ஆசிரியர்) |
| த. சிவகுமாரன் | (கம்பன் கழகம்) | இரா. செல்வவடிவேல் | (விஞ்ஞான ஆசிரியர்) |
| ஆறுதிருமுருகன் | (கம்பன் கழகம்) | | |

7) சி. ர ஜபேட் வழங்கும் கரகாட்டம்
8) வில்லிசை
ஸ்ரீதேவி குழுவினரின் வில்லிசை கலைமாமணி—S S சர்மா "கலியுகவள்ளல்"
9) மெல்லிசை

எம். ஜி. ஆர். இரவு
அருணா இசைக் குழுவினரின்
★ இசை அமுதம் ★

10) நாடகம் கலைவாணர் நாடக மன்றம் வழங்கும் சமூக நாடகம்

விளம்பர அன்பளிப்பு:
## சிறி அமலா ஜுவல்லர்ஸ்

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6762)


செல்வச்சாமி ...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்லச்சாமி அடையாளங் காணப்படக் கூடும் என்றும் 'யுக்திய' பத்திரிகையைச் சேர்ந்த திரு சமன் விசாரச்சி பி. பி. ஸி சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

ஜனவரி இரண்டாம் திகதி நடைபெறவுள்ள செயற்குழுக் கூட்டத்தில் திரு. செல்லச்சாமிக்கு எதிராகத் தீர்மானம் எடுக்கப்பட மாட்டாது என்றும்—

ஆனால் இ. தொ. காவின் அடுத்த சம்மேளனக் கூட்டத்தில் அவர் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட வாய்ப்புண்டு என்றும் இ. தொ. கா வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஓ 5 6)

மாணவர் ...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலவச சீருடைத் திட்டம் நிறுத்தப்படும் போதிலும் இலவச பாடநூல் வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படும் என்று அவ்வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

இலவச சீருடை, இலவச பாடநூல் விநியோகத் திட்டங்களை நிறுத்தவேண்டும் என்று உலக வங்கி பிரேமதாசா காலத்திலிருந்தே அழுத்தம் கொடுத்து வந்தது. (அ-3)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரி மாகிறேட் யோசவ்
(இளைப்பாறிய ஆசிரியை)

''கருணைக் கடலான அன்னை'' திருமதி மேரி மாகிறேட் யோசவ் 23 12 93 அன்று இறையடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை யோசவ் இன் அன்புமனைவியும், பிரான்சிஸ் சேவியர், அன்ரன் தேவராஜா, I F வின்சன்ற், J J மைக்கல், P. E. A தோமஸ், யோன்ஸ்ரன், டோமிற்ரில்டா, வோல்டன் ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜெயராணி சேவியர், கமலா தேவராஜா, வின்சன்ற், கிறேஸ் M. மனோகரன் தோமஸ் ஆகியோரின் மாமியாரும், கெலன் குசைப்பிள்ளை, விக்டோறியா அருளானந்தம், அருட்சகோ, எல்சி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று 24-12 93 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்
J.J மைக்கல்
(மகன்)

131, மவுண்ட் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

(28572)

### காசிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

உசனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான காசிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை 22-12-93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவதாசன், சிவாஜினி (நோர்வே), சிவசக்தி (வரதா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி சூரியகுமாரி சிவதாசன் (கனடா), திரு. ஜெயக்குமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், மலர்விழி (கனடா), ஷாமினி (கனடா), திவ்ஜா (நோர்வே) ஆகியோரின் பேரனாரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 23-12-93 அன்று (வியாழக்கிழமை) கந்தர்மடத்தில் நடைபெற்றன என்பதை அறியத்தருகிறேன்.

தகவல்
ந. நவக்குமாரன்
(பேரமகன்)
வர்த்தக வங்கி,
யாழ்.

83, பலாலி றோட்,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்

(6871)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org